முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணிச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

25.07.2021, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மசக்தியே அரங்கா வாழ்க
தவபலம் கொண்ட ஞானியே வாழ்க
சீர்திருத்தம் உலகினில் செய்யவே
சித்திபெற்று வந்த மாதவ ராஜனே
2. அரசனே உன் பெருமை கூறியே
அருளுவேன் பிலவ நள்ளி திங்கள்
இருநான்கோர் திகதி கதிரோன் வாரம்
(பிலவ வருடம் ஆடி மாதம் 9ம் நாள், 25.07.2021 ஞாயிற்றுக்கிழமை)
இயம்பிடுவேன் கண்ணிச்சித்தர் யானும்
3. யானுமே துல்லிய ஆசி தன்னை
உயர்ஞான உலகம் அமைய உரைப்பேன்
ஞானவான் அரங்கஞானி தருகின்ற
ஞான உபதேசங்களை ஏற்று
4. ஏற்றுமே உலக மக்கள் வர
இடரான சமூக இன்னல்கள் மாறி
ஆற்றல்பட இந்த கலியுகம் தானும்
ஆறுமுகன் அருளுக்கும் ஆசிக்கும் உரியதாகும்
5. ஆகவே மக்களிடை மனத் தெளிவும்
அறிவு முதிர்ச்சியும் ஞான பலமும்
மிகைபட கண்டு உலக மக்கள்
மேலான கதி அடைந்து நன்கு
6. அடைந்துமே உலகத்தை மாற்றவல்ல
அரங்கன் தேடும் ஞானிகள் ஆவர்
தடையின்றி ஓங்காரக்குடில் நோக்கி
தரணியோர் வருக வருக இந்த மாற்றம்
7. மாற்றமதும் தானாக நடந்தேறி
மண்ணுலகம் பாதுகாப்பு நிலை காண்கும்
தேற்றம் தரவந்த மாதவ யோகி
தேசிகன்பால் தீட்சை அடைதல் கண்டு
8. கண்டுமே தொடர்பூஜை செய்து கொண்டு
கருணை தரும் அரங்கன் தர்மத்தில்
தொண்டு செய்து திருவடி பணிந்து
தொடர்ந்து வந்தாலே போதுமப்பா

9. அப்பனே கலியுக மாந்தர்கட்கு
அழியாமை எனும் பெருஞானம்
தப்பாது கலியுகத்தில் சித்திக்கும்
தவராஜன் வழிகாட்டல் பெருகிவர

10. வருகவே வையகம் வளர்ச்சி பெறும்
வள்ளலான தன்மை மிகுந்து நன்கு
முருகப்பெருமான் வழிபாடு பரவி இனிதே
முழுமையான ஞானயுக மாற்றம் காணும்

11. காணவே இன்னும் காலம் தாழ்த்தா
கட்டளையாக கண்ணிச்சித்தர் என் வாக்கை ஏற்று
ஞான தேசிகன்வழி உலகோர் வரவர
ஞான யுகமாற்றம் சடுதி நடந்தேறும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–